**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.53/2019**

2024-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 22-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.விஜயா, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திருமதி.பெ.சீதாதேவி, மூன்றாம் நிலை மேசை எழுத்தர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திருமதி.விஜயா, |
| வயது | - | |
| தந்தை/கணவர் பெயர் | - | திரு.செல்வமணி |
| கிராமம் | - | வெள்ளாஞ்சேரி |
| வட்டம் | - | |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

22.08.2024
வா.சா.1.

என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை என்னிடம் படித்து காண்பித்தார்கள். **(1ம் வாதியின் கணவர் செல்வமணி என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டா வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) ( தாவா சொத்து குறித்து அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பட்டா குறித்த பெயர் பட்டியல் குறித்த வரைபடம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (30.01.2014 தேதியிட்ட பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது) ( வாதி மற்றும் அவரது சகோதரர் திரு.மார்கபந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு அனுப்பியுள்ள புகார்**

**நகல்கள் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (காவல் துறை இயக்குநர் புகார் மனுவினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள தாவா மாதிரி வரைபடம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது) மேலும் எனது பிரமாணத்தை ஏற்று தாவாவை தீர்ப்பாக்குமாறு பிரார்த்திக்கிறேன்.**

பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.